இத்திருக்கோயிலில் போதுமான நிதி வசதி இல்லாததால், அரசு நிதியுதவி ரூபாய் 10 இலட்சம் மற்றும் உபயதாரர்கள்மூலம் ரூ.11 இலட்சத்திற்குப் புதிய திருத்தேர் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண்கள் 160, 161, 162, 163, 164, 165 பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.*

[குறிப்பு : *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

2. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்

(அ) சுற்றுச்சூழல் பாதுகாப்பினை செம்மைப்படுத்துதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கைகள் அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள். (குறுக்கீடு) விதி 110-ன்கீழ் அறிவிப்பு முடியட்டும். பிறகு பார்க்கலாம்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாட்டின் வளம் வன வளத்தில் அடங்கியுள்ளது. எனவே, எனது தலைமையிலான அரசு, வன வளம் மற்றும் பசுமைப் போர்வையினைப் பாதுகாப்பதிலும், வன உயிரினங்களிடம் இருந்து மனிதர்களைக் காப்பதிலும், தமிழக மக்களுக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்பினை வழங்குவதிலும் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. இதனை மேலும் செம்மைப்படுத்தும் வகையில், பின்வரும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்:*

1. தமிழ்நாட்டின் பல பகுதிகளில் மாமிச உண்ணிகள், யானைகள், காட்டு மாடுகள், காட்டுப் பன்றிகள் மற்றும் கரடிகளால் மனித-வன உயிரின மோதல்கள் தொடர்பான நிகழ்வுகள் தொடர்ந்து நிகழ்ந்து வருகின்றன. அத்தகைய மோதல்

2015 ஆகஸ்ட் 27] [செல்வி ஜெ ஜெயலலிதா]

சூழ்நிலைகளில் அதிவிரைவான செயல்பாட்டுக்கென ஒரு குழுவினை ஏற்படுத்துவது அவசியமாகிறது. அதி நவீன கருவிகளுடன் சிறப்புப் பயிற்சி பெற்ற பணியாளர்களைக் கொண்டதாக அமையப் பெறும் இக்குழு, விரைவாகச் செயல்படுவதுடன், சிக்கலான சூழ்நிலைகளையும் மேலாண்மை செய்யும். மேலும், புலிகள் காப்பகத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் மனித-வன உயிரின மோதல்களில் ஈடுபடும் மாமிச உண்ணிகளை எதிர்கொள்வதற்கு அதி விரைவுக் குழுக்கள் உருவாக்குவதை தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையம் ஏற்றுக்கொண்டுள்ளது. எனவே, கோயம்புத்தூர், கிருஷ்ணகிரி, ஊட்டி, கடலூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் 2015-2016 ஆம் ஆண்டில் 8 கோடியே 64 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஐந்து அதி விரைவுக் குழுக்கள் ஏற்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

2. ஜவ்வாது மலை, சேர்வராயன் மலை, கொல்லி மலை, பச்சை மலை மற்றும் சித்தேரி மலைப் பகுதிகள் சந்தன மரங்கள் இயற்கையாக வளரும் தாயகமாக உள்ளன. வேலூர், சேலம், ஈரோடு, தருமபுரி மற்றும் திருச்சி ஆகிய மாவட்டங்களில் சந்தன மரங்கள் அதிகம் வளரும் இடங்களுக்கு அருகில் உள்ள பட்டா நிலங்கள் மற்றும் காப்புக் காடுகளில் சந்தன மரம் வளர்க்கும் திட்டம் செயல்படுத்தப்படும். இந்தத் திட்டம் பழங்குடியினருக்கு வேலைவாய்ப்பளித்து கூடுதல் வாழ்வாதாரப் பாதுகாப்பை உருவாக்குவதுடன், சந்தன மர வளத்தைப் பெருக்கி, அரசுக்குக் கணிசமான வருவாயை ஈட்டித் தரும். இத்திட்டம் நாளடைவில் வேலைவாய்ப்பிற்காக பழங்குடியினர் வேறு மாநிலங்களுக்கு இடம் பெயர்தலைத் தடுக்கும். இத்திட்டத்திற்கு ஆண்டொன்றுக்கு தலா 10 கோடி ரூபாய் வீதம் பத்து ஆண்டுகளுக்கு மொத்தம் 100 கோடி ரூபாய் செலவாகும். *(மேசையைத் தட்டும் ஒலி)* நடப்பாண்டில் இத்திட்டத்திற்கு 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 11-05

3. இந்தியாவில் மிகவும் நகரமயமானதும், தொழிற்சாலைகள் மிகுந்த மாநிலங்களில் ஒன்றாகவும் தமிழ்நாடு விளங்குகிறது. காற்று மாசுபடுவதற்கு முக்கிய காரணியாக வாகனங்கள் மற்றும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் புகை உள்ளது.

எனவே, காற்றின் தன்மையை நகர மற்றும் தொழிற்சாலைப் பகுதிகளில் கண்காணிப்பது மற்றும் தகுந்த தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது மிகவும் அவசியமாகிறது. எனவே, காற்றின் தன்மையை தொடர்ச்சியாக உடனுக்குடன் கண்காணிக்க மாநிலம் முழுவதும் உள்ள நகரம் மற்றும் தொழிற்சாலைப் பகுதிகளில் 25 இடங்களில் தொடர் காற்று கண்காணிப்பு நிலையங்கள் நிறுவப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் காற்றின் தன்மை குறித்த தகவல்களை முழுமையாக சேகரிக்க இயலும். தமிழ்நாடு முழுவதும் அமைக்கப்படும் இத்தகைய தொடர் காற்று கண்காணிப்பு அமைப்பானது இந்தியாவிலேயே முதன்மையானதும் மற்றும் தனிச் சிறப்பும் வாய்ந்ததாகும் என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மாணவர்களின் கல்வி சார்ந்த திட்டங்களை வலுப்படுத்துதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வலுவான பொருளாதாரத் திட்டங்கள் மற்றும் கல்வி அறிவை அளிப்பதன்மூலம் சமூக மற்றும் பொருளாதார நிலையில் நலிவடைந்துள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் வாழ்வில் நிரந்தரமான மாறுதலை ஏற்படுத்த இயலும் என்பதால் எனது தலைமையிலான அரசு, அதற்கான திட்டங்களைத் தீட்டி அவற்றை செவ்வனே செயல்படுத்தி வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியரின் கல்வி சார்ந்த திட்டங்களை மேலும் வலுப்படுத்தும் வகையில், நடப்பாண்டில் பின்வரும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்:

1. ஆதி திராவிடர் நல விடுதிகள், பழங்குடியினர் நல விடுதிகள் மற்றும் பழங்குடியினர் நல உண்டி உறைவிடப் பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவியர்களுக்குக் குறித்த நேரத்தில் உணவு தயாரித்து வழங்குவதில் உள்ள சிரமத்தினைக் குறைக்கும் வகையில், நடப்பாண்டில், 160 பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கும், 100 ஆதி திராவிடர் நலப் பள்ளி விடுதிகளுக்கும்